# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்.74/மா/2022**

**நாள். 21 .07.2022**

திரு.ஹாஜி K.E. முஹம்மது இஸ்மாயீல்,
பழங்காநத்தம், மதுரை. – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
மதுரை. – எதிர்மனுதாரர்

மதுரை, பழங்காநத்தம், பழைய முருகன் டாக்கீஸ், 1–வது தெரு, கதவு எண்.11 என்ற முகவரியில் வசிக்கும் திரு. ஹாஜி K.E. முஹம்மது இஸ்மாயீல், என்பவரின் 1.06.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 06.06.2022–ல் பெறப்பட்டு 74/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலினை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மதுரை, பழங்காநத்தம், பழைய முருகன் டாக்கீஸ், 1வது தெரு, கதவு எண்.11 என்ற முகவரியில் வசிக்கும் திரு. திரு.ஹாஜி K.E. முஹம்மது இஸ்மாயீல், என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 1.06.2022 நாளிட்ட தனது மனுவில் :

"மதுரை மாநகராட்சியில் தற்போது சட்ட அலுவலராகப் பணியாற்றும் திருமதி. R. சிவபாக்கியம் என்பவர் கர்நாடகா மாநிலத்தில் உள்ள பெங்களூரில் அல் அமீன் சட்டக் கல்லூரியில் LLB சட்டப் படிப்பில் தேர்ச்சி பெற்றதாக சான்றிதழ் ஒன்றை மாநகராட்சியில் சமர்ப்பித்து அதனடிப்படையில் "சட்ட அலுவலராக கடந்த 12.01.2015-ல் பதிவு உயர்வு பெற்று அனைத்து பணப் பலன்களையும் "அரசின் உறுதியாக்கம் பெறாமலேயே மாநகராட்சி நிர்வாகத்தை ஏமாற்றி நிதியிழப்பு ஏற்படுத்தி வருகின்றார். அன்னார் LLB பட்டம் பெற்றதாகக் கூறிய கல்லூரியில்

i) Regular College-ல் சேர்ந்து பயிலவில்லை.
ii) மாலை நேரக் கல்லூரியில் சேர்ந்து பயில வாய்ப்பு ஏதுமில்லை.
iii) அஞ்சல் வழிக்கல்லூரியின் மூலமாகப் பயிலவில்லை.

LLB சட்டப்படிப்பானது மூன்றாண்டு காலப் படிப்பாகும்; ஆனால் திருமதி R. சிவபாக்கியம் என்பவரோ.

i) LLB படிப்பதற்காக முறையாக உரியவழி அரசின் அனுமதி பெறவில்லை.

ii) படிப்பிற்கான மூன்றாண்டு காலமும் மாநகராட்சியில் பணியாற்றி அனைத்து பணப் பலன்களையும் பெற்றுள்ளார்.

இதனை உறுதி செய்யும் வண்ணம் எழுத்துப்பூர்வமான அறிக்கையை முன்னாள் மாநகராட்சி ஆணையாளரும் இன்னாள் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியருமான திரு. S. விசாகன் I.A.S. அவர்களால் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்துள்ளார். வழக்கு எண்.WP (MD) 4098 / 2019 – பக்க எண் 3 பத்தி எண் 4-ல் பின்வருமாறு தாக்கல் செய்துள்ளார்.

1997 – No Earned Leave Availed
1998 – No Earned Leave Availed
1999 – 19.04.99 to 30.04.99 (12 days) Earned Leave Availed
2000 – 12.04.2000 to 11.05.2020 (32 days) Earned Leave Availed
"During this period full salary had been paid"

எனவே சுமார் 3 ஆண்டிற்கான LLB சட்டப்படிப்பை 12+32 நாட்கள் மட்டுமே ஈட்டிய விடுப்பில் சென்று LLB படித்து தேர்ச்சி பெற்றதாகத் தெரிவித்து சான்றிதழ் சமர்பித்து சட்ட அலுவலராக பதவி உயர்வு 12.01.15-ல் பெற்றுள்ளார்.

மேலும் அன்னார் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் அஞ்சல் வழி கல்வி மூலமாக LLM பட்டம் பெற்றதாக தெரிவித்து இருந்தார். ஆனால் பல்கலைக் கழக மானியக் குழுவினரால் அஞ்சல்வழி கல்வி மூலம் LLM பயிற்றுவிக்கவும், சான்றிதழ் வழங்கவும் அண்ணாமலை பல்கலைக்கழகத்துக்கு அங்கீகாரம் வழங்கவில்லை என ஆதாரமாக சென்னை உயர்நீதிமன்ற DIVISION BENCH நீதி அரசர்களால் 13.08.2021-ம் நாளிட்ட (வழக்கு எண்: 11716/2020) LLM பட்டம் செல்லாது என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களையும் மறைத்து முறைகேடாக சட்ட அலுவலராக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

சட்ட அலுவலராக பதவியேற்றது தொடர்பாக 2015 முதல் நாளது தேதி வரை அரசின் உறுதியாக்கம் வழங்கப்படாமல் அனைத்து பணப்பலன்களையும் பெற்று மதுரை மாநகராட்சிக்கு சுமார் 7 ஆண்டுகளாக பல லட்ச ரூபாய்கள் தொடர் நிதியிழப்பு ஏற்பட்டு வருகிறது. இது சம்பந்தமாக ஆதாரங்களுடன் மதுரை மாநகராட்சி நிர்வாகத்துக்கு பலமுறை பதிவு தபால்கள் மூலம் தெரிவித்து இருந்தும் மதுரை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் இது நாள் வரை திருமதி R. சிவபாக்கியம் என்பவர் மீது எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

மேலும் திரு. V. பாலசுப்ரமணியம், திருமதி. R. சிவபாக்கியம் உட்பட 74 நபர்களுக்கு புதிய பணி விதிகளில் இல்லாத தகுதி உயர்வு உதவியாளர் என்ற பணியிடத்திற்கு உயர் பதவியான உதவியாளர் பணியிடத்திற்கு உரிய பணப்பலன்கள் வழங்கப்பட்டதால் மதுரை மாநகராட்சிக்கு சுமார் 12 கோடிக்கு மேல் தொடர் நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது.

போலியான சான்றிதழின் உண்மைத்தன்மையை (Authenticity) ஆராயாமலும் கடந்த 2012-13-ல் தணிக்கைத் துறையினரது தடை உள்ளதை மறைத்து (பத்தி எண்.:71) சட்ட அலுவலர் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. மைய நிர்வாக பிரிவில் பணியாற்றிய திரு. M.செல்வக்குமார் (கண்காணிப்பாளர்) என்பவர் உடந்தையாக இருந்து தடையில்லா சான்று வழங்கி முறைகேடான பதவி உயர்வு வழங்க ஆணையாளர் அவர்களுக்கும், மதுரை மாநகராட்சி மாமன்றத்துக்கும் தவறான தகவல் வழங்கி நிர்வாகத்தை ஏமாற்றியதுடன் மாமன்றத்தையும் ஏமாற்றி மாநகராட்சிக்கு தொடர்ச்சியாக பெரும் நிதியிழப்பு ஏற்படுத்தியுள்ளார்.

மேலும் 2017-18-ஆம் ஆண்டில் தணிக்கைச் சீட்டு எண்.217 தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனால் மதுரை மாநகராட்சி சட்டம் 1971 Section 104 (1 & 313) மற்றும் 172 ஆகிய பிரிவுகளில் VIOLATION செய்யப்பட்டுள்ளது.

அன்னார் மதுரை மாநகராட்சியில் மேயராக இருந்த திரு. V.V. இராஜன் செல்லப்பா அவர்களின் காலத்தில் (2014) புரோக்கர் மூலம் விலைக்கு வாங்கப்பட்ட LLB பட்டத்தின் மூலம் சட்ட அலுவலராக பதவி உயர்வு செய்யப்பட்டுள்ளார். இதற்கு நிர்வாக பிரிவில் அப்போதைய கண்காணிப்பாளராக பணியாற்றிய M. செல்வகுமார் என்பவர் உடந்தையாக இருந்து குற்றசெயலில் ஈடுபட்டுள்ளார். முறைகேடாக பெற்ற கல்வித் தகுதியால் மாநகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படுத்தியுள்ளார்.

i) திரு.J.விஜயகுமார் என்பவரால் பதவி உயர்வு தொடர்பாக தொடர்ந்த வழக்கில் முன்னாள் ஆணையாளரும் தற்போது மதுரை மாவட்ட ஆட்சியாளருமான திரு. அனிஷ்சேகர் அவர்களுக்கு நீதிமன்ற நடவடிக்கைகளில் தவறுதலாக வழிகாட்டி நீதிமன்றஅவமதிப்புக்கு உள்ளாக்கி ஒருவார கால ஜெயில் தண்டனையும் அபராதம் விதிக்க முக்கிய காரணமாக திருமதி R. சிவபாக்கியம் செயல்பட்டுள்ளார்.

ii) தற்போது 30.5.2022-ம் நாளன்று தூய்மை பணியாளர்கள் போராட்டம் நடத்த தூண்டுகோலாய் இருந்து, மதுரை மாநகராட்சிக்கு எதிராகவும், நிர்வாகத்திற்கு எதிராகவும் செயல்பட்டு வருகிறார். (தூய்மை பணியாளர்களை நிரந்தர பணியாளர்களாக நியமனம் செய்ய சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நீதி அரசர்களால் தீர்ப்பு வழங்கப்பட்டதை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்ய தவறுதலான வழிகாட்டியதால் போராட்டம் நடைபெற முக்கிய காரணமாக இவர் இருந்துள்ளார் என்பது தெரிய வருகிறது.)

எனவே திருமதி. R. சிவபாக்கியம் என்பவரால் வெளிமாநிலத்தில் புரோக்கர் மூலம் விலைக்கு வாங்கிய LLB பட்டத்தினை போலியான சான்றிதழை நிர்வாகத்திற்கு காண்பித்து முறைகேடாக சட்ட அலுவலராக பதவி உயர்வு பெற்றதை குற்ற செயலாக கருதி திருமதி. R. சிவபாக்கியம் என்பவரை சட்ட அலுவலர் பதிவியிலிருந்து நீக்கம் செய்வதுடன் உடந்தையாக செயல்பட்ட கண்காணிப்பாளரான M. செல்வகுமார் என்பவர் மீதும் குற்ற நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் அரசின் அனுமதி பெறாமல் சட்ட அலுவலருக்குரிய ஊதியம் நிர்ணயம் செய்தவர் மீதும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 29.06.2022அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 09.06.2022 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

மனுதாரர் 29.06.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகவில்லை. மனுதாரர் தனக்கு 67 வயது ஆகின்றது எனவும் தற்பொழுது சர்க்கரை வியாதிக்காக தொடர் சிகிச்சை பெற்று வருவதாகவும் பயணம் செய்தால் உடலில் வீக்கம் வருவதாலும், சிலசமயம் மயக்க நிலை ஏற்படுவதால் 3 மாதங்கள் பயணம் செய்ய வேண்டாம் என மருத்துவர் அறிவுறுத்தியுள்ளதாகவும் தெரிவித்து 29.06.2022 நாளன்று ஆஜராகாததற்கு அனுமதிக்கவும் என்று தனது 20.06.2022 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

மதுரை மாநகராட்சி உதவி ஆணையர் 29.06.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"மதுரை மாநகராட்சியில் சட்ட அலுவலராகப் பணியாற்றும் திருமதி ஆர். சிவபாக்கியம் மதுரை மாநகராட்சி அலுவலக உத்தரவு எண். மநி 4/1354/2006ன்படி LLM பயில அனுமதி பெற்றுள்ளார். மேலும் மதுரை மாமன்றத் தீர்மானம் எண்.805 நாள் 9.1.2015ல் முன் அனுமதி பெறாமல் LLB படித்ததை பின்னேற்பு செய்தும் சட்ட அலுவலராக பணி உயர்வு செய்யப்பட்டு அரசின் பின்னேற்பு பெற்றிட தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பதவி உயர்வு வழங்கப்பட்டது. மேற்கண்ட LLB சான்றிதழின் நம்பகத்தன்மை (Genuinity) அறியும் பொருட்டு, மேற்கண்ட பட்டயச் சான்று வழங்கிய கல்வி நிறுவனத்திற்கு சான்றிதழின் மெய்தன்மையை தெரிவிக்கும்படி 20.6.2022 அன்று மாநகராட்சியால் கடிதம் எழுதப்பட்டுள்ளது என்றும், திருமதி சிவபாக்கியத்திற்கு சட்ட அலுவலர் பணி வழங்கியது தொடர்பாக மனிதவள மேலாண்மைத்

துறைக்கும் கடிதம் எழுதப்படவுள்ளதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதே போன்று அவர் பெற்ற பதவி உயர்வுக்கு இன்னும் அரசால் confirmation வழங்கவில்லை எனவும், சட்ட அலுவலருக்கான ஊதியமும் அவர் பெறவில்லை என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் திருமதி சிவபாக்கியத்திடமிருந்து அவர் படித்த LLB குறித்து உரிய விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டு, அவரிடமிருந்து மாநகராட்சியால் பதில் பெறப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி சிவபாக்கியம் என்பவரின் சட்ட அலுவலர் பதவி உயர்வு குறித்து திரு. கார்மேகம் என்பவர் தொடுத்த வழக்கும் (W.P.No.4095 of 2019) மேலும் முத்துக்குமார் என்பவர் தொடுத்த வழக்கும் (W.P. (MD) No.20251 of 2015 and M.P. (MD) No.1 to 3 of 2015) முடிவுற்றுள்ளது என்கின்ற விவரத்தையும், மேலும் மேற்கண்ட திருமதி. ஆர். சிவபாக்கியம் என்பவருக்கு சட்ட அலுவலராக பதவி உயர்வு வழங்கப்பட்டதை எதிர்த்து மனுதாரர் திரு. முகம்மது இஸ்மாயில் என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு (வழக்கு எண்.5881/2021) தொடரப்பட்டு, தற்போது அது நிலுவையில் உள்ளது என்கின்ற விவரத்தையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நேர்வு தொடர்பான எனது 28.6.2022 நாளிட்ட கடிதத்தையும் எனது ,மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார். உதவி ஆணையர், மதுரை மாநகராட்சி தனது 28.06.2022 நாளிட்ட அறிக்கையில்

"திருமதி, R. சிவபாக்கியம் என்பவர் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் மேல்நிலைப்பள்ளி கல்வித்தகுதியுடன் 06.07.1992ல் FNO (Female Nursing orderly) ஆக பணியேற்பு செய்து உள்ளார். மேலும் இளநிலை பட்டப்படிப்பு பயில (H2/66671/93 நாள்.29.07.1993ல் உரிய அனுமதி பெற்றுள்ளார். ஆணையாளர் அவர்களின் உத்தரவின்படி 13.07.1994–ல் பெண் செவிலியராக பணிபுரிந்த பணியிடத்தில் எவ்வித மீள் உரிமை கோரக்கூடாது என்ற நிபந்தனை அடிப்படையில் தட்டச்சராக பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார். மதுரை மாநகராட்சியில் பணிபுரியும் தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்தர் மற்றும் இளநிலை உதவியாளர்களை உதவியாளர்(தகுதி உயர்வு) பணியிடங்களுக்கு பணி உயர்வு செய்ய ஏதுவாக பணிமூப்பு பட்டியல் நியமனக்குழு தீர்மானம் எண் 28/27.08.1996–படி அங்கீகரிக்கப்பட்டுவெளியிடப்பட்டுள்ளது.அப்பட்டியலில்திருமதி.ஆர்.சிவபாக்கியம் என்பவர் வரிசை எண் 14–ல் வரிசைப்படுத்தப்பட்டுள்ளார். மதுரை மாநகராட்சி நியமனக்குழு தீர்மானம் எண் 67/24.09.1996–ன்படி உதவியாளர் (தகுதி உயர்வு) பதவிக்கு தகுதியுடையவராகிறார் என்று தீர்மானிக்கப்பட்டது. அதனடிப்படையில் 01.10.1996 முதல் தகுதி உயர்வு உதவியாளராக பதவி உயர்வு செய்யப்பட்டுள்ளார். ஆணையாளர் அவர்களின் உத்தரவு மநி 2/8107/2006 நாள்.25.06.2009ன்படி Assistant (Up Grade) பணியிடத்திலிருந்து உதவியாளராக பதவி உயர்வு செய்யப்பட்டுள்ளார். அதன் பின்னர் ஆணையாளர் அவர்களின் செயல் முறை ஆணை எண் மந1/004724/2014 நாள்.04.03.2014–ன்படிஉதவியாளர்பணியிடத்திலிருந்து கண்காணிப்பாளராக பதவி உயர்வுசெய்யப்பட்டுள்ளார். மதுரை மாநகராட்சியின் அலுவலக உத்தரவு எண்.மநி 4/1357/2006–ன்படி L.L.M. (Legis Legum Magister) பயில உரிய அனுமதி பெற்றுள்ளார். மதுரை மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண்.805 நாள். 09.01.2015–ல் முன் அனுமதி பெறாமல் L.L.B. படித்தது பின்னேற்பு செய்தும் சட்ட அலுவலராக பணி உயர்வு செய்யப்பட்டு அரசிற்கு பின்னேற்பு அனுப்பவும் மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, பின்னர் பதவி உயர்வு வழங்கப்பட்டது.

மேற்கண்ட புகார் மனு தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொண்டு திருமதி. R.சிவபாக்கியம் வெளிமாநிலத்தில் சட்டப்படிப்பு பயின்றது தொடர்பாக அன்னாருக்கு பட்டயச்சான்று வழங்கிய கல்வி நிறுவனத்தாருக்கு சான்றிதழ் மெய்தன்மை மற்றும் கல்வி பயின்ற

இது குறித்து திருமதி. R. சிவபாக்கியம், சட்ட அலுவலரிடம் உரிய விளக்கம் கோரிய குறிப்பாணை அனுப்பப்பட்டு இதில் பின்வருமாறு விளக்கம் சமர்ப்பித்துள்ளார். அதில் அல்–அமீன் கல்லூரி நிர்வாகத்தினால் தாக்கல் செய்யப்பட்ட எதிரிவாதுரையில் " It is true that the 10th. respondent Smt. Sivabagyam. R. was student of 3 year LLB Course and passed with Register No.97LPL01087 in the year April 2000 என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே தான் சட்டம் பயின்றதும் தேர்ச்சி பெற்றதும் உண்மை என நீதிமன்றத்திலேயே சம்பந்தப்பட்ட கல்லூரியால் எழுத்துபூர்வமாக உறுதி செய்யப்பட்டுள்ளது என்ற விளக்கம் சமர்ப்பித்தும், மேலும் மதுரை மாநகராட்சி அனுமதியுடன் அண்ணாமலை பல்கலை கழகத்தில் தொலைதூர கல்வியில் L.L.M. 2006ம் ஆண்டு பயின்று பட்டம் பெற்றதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் 15 வருடங்கள் கழித்து அண்ணாமலை பல்கலை கழகத்திற்கு அங்கீகாரம் இல்லை என மனுதாரர் கூறுவதற்கும் எனது கல்விக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்ற விளக்கம் சமர்ப்பித்துள்ளார்.

ஆனால் மனுதாரர் திரு. ஹாஜி K.E. முகமது இஸ்மாயில், என்பவ்ரால் மதுரை மாநகராட்சி சட்ட அலுவலர் திருமதி. ஆர்.சிவபாக்கியம் என்பவருக்கு வழங்கப்பட்ட பதவி உயர்வு தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் W.P.(MD) No. 15881/2021–படி வழக்கு தொடரப்பட்டு வழக்கு நாளது தேதி வரை வழக்கு நிலுவையில் உள்ளது. மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழங்கப்படும் தீர்ப்பின் அடிப்படையில் உரிய மேல்நடவடிக்கை தொடரப்படும் என்ற விபரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, மதுரை மாநகராட்சி உதவி ஆணையர் அவர்களின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

இந்நேர்வில் மனுதாரர் போலியான சான்றிதழ் மூலம் முறைகேடாக சட்ட அலுவலராக பதவி உயர்வு பெற்ற திருமதி. R. சிவபாக்கியம் என்பவரை சட்ட அலுவலர் பதவியிலிருந்து நீக்கம் செய்வதுடன் இதற்கு காரணமாக இருந்தவர்கள் மீதும் உரிய நடவடிக்கை எடுக்க தனது புகார் மனுவில் கோரியுள்ளார்.

இந்நேர்வு தொடர்பாக திரு. முத்துகுமார் என்பவரால் மதுரை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் (வழக்கு எண்.WP (MD) No.20251 of 2015 மற்றும் MP (MD) No. 1 to 36 2015) நாள்:9.8.2017 இரு நீதியரசர்கள் கொண்ட அமர்வு கீழ்கண்டவாறு தீர்ப்பு வழங்கியுள்ளது.

" para 12 xxx xxx xxx

The qualification very clearly indicates that the candidate must have a degree in Law or equivalent degree, meaning thereby, even a degree holder possessing equivalent degree would be eligible for appointment to the post of Law Officer. There is no mention anywhere that the candidate must have studied the Law Degree by undergoing a regular course and that he should be entitled to practice the profession of Law. In the absence of any such stipulation, the petitioner cannot be heard to say that the fifth respondent was not eligible for appointment to the post of Law Officer. No other contentions were taken before us.

**13.** The fifth respondent satisfied the eligibility criteria and as such, she was rightly appointed by the Madurai Corporation. We do not find any ground made out by the petitioner for issuing a Writ and more particulary, a Writ of Quo Warranto.

மேலும் மனுதாரால் திருமதி R.சிவபாக்கியம் என்பவருக்கு சட்ட அலுவலர் பதவி குறித்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் W.P. (MD) No. 15881/2021 தொடரப்பட்டு நாளது தேதி வரை நிலுவையில் உள்ளது.

2014ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டபிரிவு 10(3)(b)ன்படி நீதிமன்றமொன்றின் முன்பு நிலுவையிலுள்ள பொருட்பாடு எதனையும் முறைமன்ற நடுவர் விசாரணை செய்தல் கூடாது என்பதால் இப்புகார் மனுவினை மேற்கொண்டு பரிசீலனை செய்ய இயலாது என முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2022-ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 21-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. ஹாஜி K.E. முஹம்மது இஸ்மாயில்,
11, பழைய முருகன் டாக்கீஸ் 1வது தெரு,
பழங்காநத்தம், மதுரை – 625 003.

2. ஆணையாளர்,
மதுரை மாநகராட்சி,
மதுரை.

3. இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032

21/7/22

செயலாளர்